# Tamilnadu Petroproducts Limited

Email: secy-legal@tnpetro.com
Phone No.: 044 - 69185588

Secy / 189 / 2024-25

September 3, 2024

The Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza, 5th Floor
Plot No: C/1 G Block,
Rotunda Building, PJ Towers
Bandra Kurla Complex, Bandra (East)
Mumbai – 400 051
**Scrip ID / Symbol: TNPETRO**

The Manager
BSE Limited
Corporate Relationship Department
1st Floor, New Trading Ring
Dalal Street,
Fort
Mumbai – 400 001
**Scrip ID: 500777**

Dear Sir / Madam,

**Sub: Newspaper Publication – 39th Annual General Meeting of the Company**

Further to the submission of Annual Report for the financial year 2023-24 vide letter dated 2nd September 2024 and pursuant to Regulation 47(1)(d) of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith the copy of advertisement on "Notice of AGM and other related matters" published by the Company in Makkal Kural (Tamil) on 03.09.2024.

The above will also be made available on the website of the Company www.tnpetro.com.

We request you to take the above on record.

Thanking you,

Yours faithfully,
For **Tamilnadu Petroproducts Limited**

Sangeetha S
Digitally signed by Sangeetha S
Date: 2024.09.03 16:47:05 +05'30'

**Sangeetha Sekar**
**Company Secretary**

Encl: As above

1984 - 2009 25 Years MOVING AHEAD

DNV-GL ISO 9001:2015 · DNV-GL ISO 14001:2015 · DNV-GL ISO 45001:2018

# தமிழ்நாடு பெட்ரோப்ராடக்ட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மணலி எக்ஸ்பிரஸ் ஹைவே, மணலி, சென்னை-600 068.
CIN: L23200TN1984PLC010931
வலைதளம்: www.tnpetro.com மின்னஞ்சல்: secy-legal@tnpetro.com
தொலைபேசி & நகல் எண்: 044-25945588 / 69185588


## வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றிய அறிவிப்பு

பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் 39வது வருடாந்திர பொதுக்கூட்டம் வியாழக்கிழமை, 26 செப்டம்பர், 2024, அன்று பிற்பகல் 3.30 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொலி காட்சி (VC) / இதர ஒலி ஒளி ஆடியோ சாதனங்கள் (OAVM) மூலம் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஆகஸ்ட் 23, 2024 அன்று வெளியிட்ட பொது அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி 2023-24 ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு ஆகியவை 02 செப்டம்பர், 2024 அன்று கம்பெனி / முதலீட்டு பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த பங்குதாரர்களுக்கு மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்படும். இவை கம்பெனியின் வலைதளம் மற்றும் ஸ்டாக் எக்ஸ்சேஞ்களின் வலைதளங்களான www.tnpetro.com மற்றும் www.bseindia.com & www.nseindia.com ல் உள்ளது.

**VC/OAVM மூலமாக வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் வசதி மற்றும் பேசும் வாய்ப்பு**

CDSL மின்னணு வாக்கு முறையின் மூலமாக மற்றும் VC/OAVM மூலமாக வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் வசதி பங்குதாரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. கூட்ட அறிவிப்பில் கூட்டத்தில் சேருவதற்கான விவரமான வழிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் சேருவதற்கான வசதி வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நாளில் பிற்பகல் 3.15 மணி முதல் 3.45 மணி வரை இருக்கும்.

கம்பெனி விவகாரங்கள் துறையின் பொருத்தமான சுற்றறிக்கைகளின்படி கூட்டத்தில் பதிலிகள் நியமனத்திற்கு விதிகள் ஏதுமில்லை.

கூட்டத்தில் பேச விரும்பும் உறுப்பினர்கள் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் வலைதளம் https://investors.cameoindia.com மூலமாக தங்களை பதிவு செய்து கொள்ளலாம். வியாழக்கிழமை, 19 செப்டம்பர், 2024 அன்று காலை 9.00 மணி முதல் சனிக்கிழமை 21 செப்டம்பர், 2024 மாலை 5.00 மணி வரை மேற்கூறிய வசதி திறந்திருக்கும். கூட்டத்தின்போது உடனடியாக பதிவு செய்யும் வசதி கிடையாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கண்ட முறை மூலமாக பதிவு செய்த பங்குதாரர்கள் மட்டுமே கூட்டத்தில் பேச இயலும்.

வருடாந்திர கூட்டத்தில் பேச விரும்பாத உறுப்பினர்கள், ஆனால் கூட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள அலுவல்கள் மீது ஏதேனும் தெளிவாக்கல் தேவைப்படின் அவர்களது கேள்விகளை செப்டம்பர் 20, 2024 மாலை 5.00 மணி வரை அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தங்கள் பெயர், கைபேசி எண், டீமேட் கணக்கு எண்/ஃபோலியோ எண், மற்றும் இதர விவரங்களை secy-legal@tnpetro.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்விதம் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களை உரிய முறையில் கம்பெனியால் பதில் அளிக்கப்படும்.

**பங்கு பரிமாற்ற பதிவேடு முடக்கம்**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91-ன்படி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் 19-09-2024 முதல் 26-09-2024 வரை (இவ்விரு நாட்கள் உள்பட) முடக்கி வைக்கப்பட்டிருக்கும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**2023-24 ஆண்டிற்கான ஈவுத்தொகை அறிவிப்பு மற்றும் வழங்குதல்**

2023-24 ஆண்டுக்கான ஈவுத்தொகை உறுப்பினர்களால் மேற்படி கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டால் செப்டம்பர் 18, 2024 அன்று வர்த்தக முடிவு நேரத்தில் பயனாளிகள் பட்டியலில் உள்ள பங்குதாரர்கள் மற்றும் செப்டம்பர் 26, 2024 அன்று உறுப்பினர் பதிவேட்டில் உள்ள ஏனைய பங்குதாரர்களுக்கும் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் வழங்கப்படும்.

ஈவுத்தொகையை பெற, டீமேட் வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்களது வங்கி கணக்கு விவரங்களை டெபாசிடரி பார்ட்டிசிபன்டிட் (DP)யிடம் பதிவு செய்ய வேண்டும். காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள நபர்கள் செப்டம்பர் 27, 2024 முன்னரே RTAவிடம் விவரங்களை பதிவு செய்திருக்க வேண்டும்.

01.04.2024 முதல் ஈவுத்தொகை மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்படும். குறிப்பிட்ட நேரத்திற்குள் ஈவுத்தொகையினை பெற்றுக்கொள்ள பங்குதாரர்கள் தங்களது வங்கி கணக்கு விவரங்களை முன்னதாகவே தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆணைப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

2023-24 நிதி ஆண்டிற்கான ஈவுத்தொகை வருமான வரி பிடித்தத்திற்கு உட்பட்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். வரி பிடித்தம் செய்யாமல் இருக்க படிவம் 15G/15H விபரங்களை தனிநபர்கள் 27.09.2024 முன்னரே சமர்பிக்க வேண்டும். மேலும் விரிவான விவரங்களுக்கு கூட்ட அறிவிப்பினை பார்வையிடவும்.

**தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி**

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, பொருத்தமான விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடுத் தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன்படி தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலமாக கூட்டத்தில் உறுப்பினர்கள் தங்களது வாக்கினை பதிவு செய்வதற்கு வசதியாக சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) மூலமாக கம்பெனி வசதி செய்துள்ளது. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலமாக மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு மூலமாக பங்கேற்பதற்கான விரிவான நடைமுறைகள் கூட்ட அறிவிப்பில் உள்ளது. செப்டம்பர் 19, 2024 அன்று உரிமை நிர்ணயிப்பு தேதியாக கொள்ளப்பட்டு மற்றும் அன்றைய தேதியில் நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமையை பெற்றவர்கள் ஆவர்.

கூட்ட அறிவிப்பு அனுப்பிய பின் பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினர்கள் ஆன நபர்கள் மற்றும் உரிமை நிர்ணயிப்பு தேதியன்று பங்குகளை வைத்துள்ளவர்கள் VC/OAVM மூலமாக பங்கேற்க மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி பெறுவதற்கு RTAஐ அணுகி உள்நுழைவு விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை செப்டம்பர் 20, 2024 காலை 9.00 மணி (இந்திய நேரப்படி) முதல் புதன்கிழமை செப்டம்பர் 25, 2024 மாலை 5.00 மணி (இந்திய நேரப்படி) வரை தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு செய்யலாம். இதன் பிறகு தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு செய்திடும் வசதி இருக்காது. தொலைதூர மின்னணு வாக்களிக்காத உறுப்பினர்கள் கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். தொலைதூர மின்னணு வாக்குப் பதிவின் மூலம் வாக்களித்தவர்கள் பொதுக்கூட்டத்தில் பங்கு கொள்ளலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க முடியாது. பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மின்னணு வாக்குப் பதிவு முடிவுகள் அறிவிக்கப்படும். அவை நிறுவன இணையதளத்தில் மற்றும் www.cdslindia.comல் வெளியிடப்படும்.

VC/OAVM மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப் பதிவின் மீதான சந்தேக விளக்கம் பெற உறுப்பினர்கள் CDSL-ன் இணையதளத்தில் (**www.evotingindia.com**) உள்ள கையேட்டையோ, சந்தேக விளக்க வினா-விடைகளையோ பார்க்கலாம் அல்லது **helpdesk.evoting@cdslindia.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம் அல்லது திரு.ராகேஷ் தால்வி. மூத்த மேலாளர் சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) A பகுதி 25வது தளம், மாரத்தான் ப்யூச்சரக்ஸ், மஃபட்லால் மில் காம்பவுண்ட், N M ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை - 400 013 அல்லது **helpdesk:evoting@cdslindia.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 18002109911 என்ற உதவி மைய எண்ணை அழைக்கலாம்.

**இயக்குனர் குழு ஆணைப்படி**
**தமிழ்நாடு பெட்ரோப்ராடக்ட்ஸ் லிமிடெட்டிற்காக**

இடம் : சென்னை
தேதி : 02.09.2024

சங்கீதா சேகர்
நிறுவனச் செயலர்

பங்குதாரர்கள் தங்கள் கோரப்படாத / பணமாக்கப்படாத ஈவுத்தொகையினை மற்றும் இதர அறிவிப்புகளை பெற்றுக்கொள்ள நிறுவனத்திடமோ அல்லது எங்கள் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடமோ அல்லது டெபாசிடரி பார்ட்டிசிபன்டிடமோ தங்களின் முகவரி, வங்கி கணக்கு சம்பந்தமான மற்றும் KYC விவரங்களை சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.